<u>மொழிபெயர்ப்பு</u>

**ஊடக அறிவித்தல்**

***மக்களியல் மற்றும் சுகாதார அளவீடு அறிக்கை வெளியீடு – 2016***

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகார அமைச்சு

*DCS/DG/Press* தொலைபேசி: *011-2147458*, தொலைநகல்: *011-2147447* *18* செப்ரெம்பர் *2017*

இலங்கையின் மக்களியல் மற்றும் சுகாதார அளவீடு அறிக்கை – *2016* ஆனது, தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணக்களம் *(DCS)* மற்றும் சுகாதாரம், போஷாக்கு மற்றும் சுதேச மருத்துவ அமைச்சு *(MHNIM)* ஆகியவற்றால் இணைந்து மேற்கொள்ளப்பட்டு, *2017* செப்ரெம்பர் *18*ஆந் திகதி வெளியிடப்பட்டது. இவ் அறிக்கையின் முதற்பிரதியானது, சுகாதாரம், போஷாக்கு மற்றும் சுதேச மருத்துவ அமைச்சின், கௌரவ பிரதி அமைச்சர் திரு. பைசால் காசிம் அவர்களுக்கு வழங்கப்பட்டது.

இவ் அளவீட்டின்போது சேகரிப்பட்ட தரவுகளில், வீட்டுக் கூறுகளின் மக்களியல் மற்றும் குடித்தனப் பண்புகள் மற்றும் இனப்பெருக்க வயதுடைய *(15 – 49* வருடங்கள்*)* என்றாவது திருமணமாகிய பெண்கள் மற்றும் அவர்களது *5* வயதிற்குக் கீழ்ப்பட்ட பிள்ளைகள் ஆகியோரின் சுகாதாரம் தொடர்பான தகவல்கள் உள்ளடங்குகின்றன. அவ்வாறான பெண்களின் பிற்புலப் பண்புகள், இனப்பெருக்க வரலாறு, குடும்பத் திட்டமிடல் முறைகளின் அறிவு மற்றும் பாவனை, பிரசவத்திற்கு முன்னரான மற்றும் பின்னரான பராமரிப்பு, பிள்ளைகளின் நோய்த்தடுப்பு, சுகாதாரம் மற்றும் போஷாக்கு, கருவள விருப்புகள், துணைவரின் பின்னணி மற்றும் பெண்களின் தொழில், எய்ட்ஸ் *(AIDS)* தொடர்பான அறிவு மற்றும் பாலியலினால் பரவும் நோய்கள் *(STDs)*, சுகவனிதையர் சிகிச்சை நிலையங்கள் மற்றும் விசேட பராமரிப்புத் தேவையான பிள்ளைகள் போன்றவற்றின் விழிப்புணர்வு ஆகியவற்றின் பிரதான கருப்பொருள்கள் பற்றிய தகவல்கள் இவ் அறிக்கையில் ஒன்றுதிரட்டப்பட்டுள்ளன.

இலங்கையின் மக்களியல் மற்றும் சுகாதார அளவீடு அறிக்கை – *2016* ஆனது, இனப்பெருக்க வயதுடைய பெண்களின் மொத்தக் கருவளவீதமானது *2.2* ஆகக் காணப்படுவதை வெளிக்காட்டுகிறது. கருத்தடைப் பாதுகாப்பு வீதத்தைப் பொறுத்தவரை, திருமணபந்தத்திலுள்ள பெண்களில், கருத்தடை சாதனங்களின் பாவனையானது 65 சதவீதமாகக் காணப்படுகிறது. பெரும்பாலும் அனைத்துப் பெண்களும் பிரசவத்தின்போதான பராமரிப்பை பெற்றுக்கொள்வதாகக் கண்டறியப்பட்டுள்ளதாக, பணிப்பாளர் நாயகம் கலாநிதி ஏ.ஜே. சத்தரசிங்க தெரிவிக்கின்றார். பிள்ளைகளின் இறப்பு, சிசு மரணம் மற்றும் 5 வயதிலும் குறைந்த பிள்ளைகளின் இறப்புகள் தொடர்ச்சியாகக் குறைவடைதல் ஆகியன குறிப்பிடக்கூடிய சாதனையாகும். அவர் மேலும் தெரிவிக்கையில் *"*மக்களியல் மற்றும் சுகாதார அளவீடு – *2016"* இன் அறிக்கையானது குறிப்பிட்ட எண்ணிக்கையான குறிகாட்டிகளைக் கொண்டுள்ளதுடன், அறிக்கையின் மென்பிரதியானது தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் இணையத்தளமான <u>www.statistics.gov.lk</u> இல் வெளியிடப்படும். நாட்டின் சுகாதாரத் துறையை மேம்படுத்தத் தேவையான தீர்மானங்களை மேற்கொள்ள, உறுதியாகக் கூறப்பட்ட பெருமளவு தகவல்களை, இவ் அறிக்கை வழங்குகிறது.

செயலாளர் திரு. ஜனக்க சுகததாச, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்திய கலாநிதி ஜயசுந்தர பண்டார, சுகாதாரம், போஷாக்கு மற்றும் சுதேச மருத்துவ அமைச்சின் திட்டப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி. எஸ்.சீ. விக்ரமசிங்க மற்றும் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் கலாநிதி ஏ.ஜே. சத்தரசிங்க, மேலதிகப் பணிப்பாளர் நாயகம் திருமதி. ஐ.ஆர். பண்டார மற்றும் இரு நிறுவனங்களினதும் பணிக்குழுவினர், ஏனைய அரச நிறுவனங்களிலிருந்து அழைக்கப்பட்டவர்கள் ஆகியோர் இவ்வெளியீட்டு நிகழ்வில் பங்குகொண்டனர்.

கலாநிதி ஏ.ஜே. சத்தரசிங்க
பணிப்பாளர் நாயகம்
தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்